Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 பெப்ரவரி (12 - 02 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 359

## "கடவுள் எப்பொழுதும் இப்பொழுதும் தேவை"

(றியாட்)

"ஆபத்து வேளையில் எம்மை இரட்சியுங்கள்" இவ்வாறு வளைகுடாப் போரில் ஈடுபட்டுள்ள ஐரோப்பியப் படையினர் கடவுளை வேண்டுகிறார்கள். வளைகுடாப் பகுதிக்குப் படைகளுடன் சென்றிருக்கும் கிறிஸ்தவமத குருமார் இத்தகவலை வெளியிட்டுள்ளார்கள். கத்தோலிக்க சமயப் பூசைப் பலிக்கும், ஆராதனைகளுக்கும் வரும் சிப்பாய்களின் எண்ணிக் (4ஆம் பக்கம் பார்க்க)

## முன்னேற முயன்ற இராணுவம் - புலிகள்

# தாண்டிக்குளப்பகுதியில் 2ஆம் நாளாக கடும் சமர்!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இரண்டாவது நாளாக நேற்றும் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் தாண்டிக்குளம், புதுக்குளம், நெச்சி மோட்டை ஆகிய பகுதிகளில் கடும் மோதல் இடம்பெற்று வருகிறது. வவுனியா முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினரின் முன்னேறும் முயற்சி புலிகளின் கடும் தாக்குதல் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இம்மோதலில் ஐந்து புலிகள் வீரமரணமடைந்தனர்.

வவுனியா நகரில் இருந்த நேற்று முன்தினம் வெளியேறி வந்தது போல மீண்டும் நேற்றுக் காலை ஆறுமணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் தாண்டிக்குளம் பகுதி நோக்கி வந்தனர். தாண்டிக்குளத்தை அண்மிக்கும் போதே புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதலை இராணுவத்தினர் சந்திக்க வேண்டியிருந்தது. காலை ஏழுமணியளவில் ஆரம்பித்த இந்த தாக்குதல் ஒன்பது மணிவரையும் நீடித்தது. மேலும் ஒரு அடிதானும் எடுத்து வைக்க முடியாதவகையில் தாக்கப்பட்டனர். இந்த தாக்குதலைத் தொடர்ந்து தமது நிலைகளிலிருந்து முன்னேற முடியாது திணறிய வண்ணம் உள்ளனர்.

இதேவேளை பரநாட்டகல் பகுதியிலிருந்து நெச்சி மோட்டை பகுதி நோக்கி வந்த இராணுவத்தினர் மீதும் கடுமையான எதிர்த்தாக்குதல் நடைபெற்ற வண்ணம் இருந்ததாக அங்கிருந்து எமக்கு இறுதியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதல்களில் இராணுவத்தினர் பலத்த இழப்புகளை சந்தித்துள்ளனர் என்றும் அதேவேளை இவர்களது மொத்த சேத விபரங்கள் பற்றிய செய்திகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை.

### முதல் நாள் யுத்தம்

வவுனியா இராணுவத்தினர் தமது முகாம்களை விட்டு வெளியேறி இன அழிப்புக்காக (4ஆம் பக்கம் பார்க்க)

## இரு ஆயுதப்படையினர் பலி

(கொழும்பு)

குச்சவெளியில் நேற்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகளை அகற்றிய ஒரு இராணுவ வீரரும், ஒரு பொலிஸாரும் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

## வீரவணக்கம்

### வவுனியாவில் ஐவர்

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் வரதன் (சத்தியசீலன் புளியங்குளம்), ஜனா (விஜயகுமார் முத்தயன் கட்டு) கருண (பிரேமகுமார் சேமமடு), மகான் (விஜயசுந்தரம் பதுளை) பிரேமன் (உதயகுமார் சின்னத்தம்பனை) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## குண்டுவீச்சில் நால்வர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நொச்சிமோட்டைப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுத்தாக்குதல் நடாத்தியதில் நான்குபேர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 7-30 மணியளவில் நடாத்தப்பட்ட இக்குண்டுத்தாக்குத (4ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் அகதிகளுக்கு அனுப்பப்பட்ட பொருள்கள்

## சிங்கள குடியேற்றவாசிகளுக்கு சர்வோதயத்தால் விநியோகம்

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள அகதிகளுக்கென அண்மையில் தமிழ் அதிகாரிகளின் முயற்சியினால் கொழும்பு சர்வோதய தலைமையக மூலம் திருமலை சர்வோதய வடகிழக்கு மாகாணத் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியுடைய சமையல் அறை உபகரணங்கள் அனைத்தும் திருமலை (4ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் சுற்றிவளைப்பு 50 தமிழர் கைது; ஒருவர் கொலை

(அம்பாறை)

சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் அம்பாறைப் பகுதியில் ஐம்பது தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலையில் அம்பாறையில் உள்ள தாண்டியடி முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் இன்னத்தோட்டம் பகுதியைச் சுற்றிவளைத்து ஐம்பது தமிழ்ப் பொதுமக்க (4ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக் அழிக்கப்படுமானால் சோவியத் கொள்கை மாறும்

### - அலெக்சாண்டர் டிவினஸ்கோ

பாரசீக வளைகுடாப் போரில் ஈராக் அழிக்கப்படும் அபாயம் ஏற்படும் பட்சத்தில் சோவியத் யூனியன் வளைகுடாப் போர் தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுமென்று சோவியத் வெளியுறவுப் பாராளுமன்ற ஆணைக்குழுவின் தலைவர் அலெக்சாண்டர் டிவினஸ் (4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்ட உணவு விநியோகம் இராணுவத்தினரால் பாதிப்பு

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தின் நிர்ப்பந்தத்தின் பேரில் கப்பல்களில் வரும் உணவுப் பொருள்கள் மன்னார்த் தீவில் இறக்கப்பட்டு சேமிக்கப்படுவதால் அவற்றைப் பொதுமக்களுக்கு வழங்குவதில் பெருஞ் சிரமம் ஏற்பட்டுள்ளது. இப் பொருள்களை இங்கிருந்து பிரதான நிலப் பரப்பிற்கு ஏற்றிச் செல்வதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

மன்னார் தீவுப் பகுதிக்கும் பெருநிலப்பரப்பிற்குமிடையே யான பிரதான பாதை துண்டிக்கப்பட்டுள்ளதாலும், பெருநிலப்பரப்பு பகுதியில் ஐந்து ப. நோ. கூ. சங்கங்கள் அமைந்துள்ளதனாலும் கப்பலில் வரும் பொருள்களை பெருநிலப்பரப்பை அண்டிய வங்காலைக் கடற் பரப்பிலேயே இறக்குவதென அரச அதிபர் முயற்சி எடுத்தபோதிலும் மன்னார் மாவட்ட இராணுவ அதிகாரி பிரிகேடியர் பீரிஸ் என்பவரின் நிர்ப்பந்தத்தின் (4ஆம் பக்கம் பார்க்க)

## குழந்தைகளுக்கு அரசியல் தெரியாது; அவர்களை நாம் பட்டினிபோட முடியாது

### - பெரஸ்டி கொயிலர்

குழந்தைகளுக்கு அரசியல் தெரியாது அவர்களை நாம் பட்டினி போட முடியாது என "லண்டன் இன்டிபென்டன்ட்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஐ. நா. பொதுச்செயலாளர் பெரஸ்டி கொயிலர் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் மேலும் அவர் குறிப்பிடுகையில் வளைகுடாப் போரினால் அப் (4ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்குப் பகுதியில் 3,33,234 அகதிக் குடும்பங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தற்போது சுமார் நான்கு லட்சத்து இருபத்தேழாயிரத்து நானூற்றிப் பதினேழு குடும்பங்கள் அகதிகளாக உள்ளனர். இவர்களில் சுமார் மூன்று லட்சத்து முப்பத்து மூவாயிரத்து இருநூற்றி முப்பத்து நான்கு குடும்பங்கள் வடக்கு கிழக்கு பகுதிகளில் அகதிகளாக உள்ள தமிழ் குடும்பங்களாகும்.

வடபகுதியில் மன்னார் மாவட்டத்தில் ஒரு லட்சத்து ஏழாயிரம் குடும்பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 55,000 குடும்பங்களும் கிளிநொச்சி, வவுனியா மாவட்டத்தில் 27,000 குடும்பங்களும் யாழ் மாவட்டத்தில் 22,000 குடும்பங்களும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 57,000 குடும்பங்களும் அம்பாறை மாவட்டத்தில் 26 000 குடும்பங்களும், திருக்கோணமலை மாவட்டத்தில் 39 234 குடும்பங்களும் அகதிகளாக உள்ளனர்.

வழமையான குடும்ப அணிப் (4ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

சமூகக்கல்வி

வெளிவந்துவிட்டது! சமூகக்கல்வி - ஆண்டு: 11. (புதிய பாடத்திட்டம்) ஆசிரியர்: ந. தர்மபாலன். சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (R-1084)


# 4 ஆண்டுகளாக முடிக்கப்படாத அபிவிருத்திச்சபைக் கணக்குகள்

(யாழ்ப்பாணம்)

1987ஆம் ஆண்டு கலைக்கப்பட்டுவிட்ட யாழ். மாவட்ட முன்னைய அபிவிருத்திச் சபையின் கணக்குகள் இன்னும் முடிக்கப்படாத நிலையில் கடந்த நான்கு ஆண்டுகளாக இழுத்தடிக்கப்பட்டுவருகிறது.

பிரதேச அபிவிருத்திச்சபை எனும் அலுவலகங்கள் முன்பு இருந்து வந்தன. ஆனால் இவை 1987ஆம் ஆண்டு தொடக்கம் பிரதேச சபைகள் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அபிவிருத்திச் சபைகளின் முடிவுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு பிரதேச சபைகளின் விசேட ஆணையாளரிடம் ஒப்படைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளாக இது முடிக்கப்படவில்லை. இந்த நிலை வடக்கு கிழக்கு பகுதிகளில் மட்டுமே ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைக்கான காரணம் பற்றி யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை முடிவுக் கணக்குகள் தயாரிக்கும் அலுவலர்களிடம் வினவியபோது இராணுவ நடவடிக்கைகளை காரணம் காட்டி ஒவ்வொரு முன்னைய பிரதேச அபிவிருத்திச் சபைத்தலைவர்களும் இழுத்தடித்து வருவதாகவும் யாழ். மாவட்டத்திற்கு 54 பிரதேச அபிவிருத்திச் சபைகள் இருந்தன. ஆனால் இவற்றில் இப்பொழுது ஒரு சிலவற்றைத் தவிர ஏனைய அபிவிருத்திச் சபை இன்னும் முடிவுக் கணக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்காததால் முன்னைய அபிவிருத்திச் சபையின் சொத்துக்கள் பொறுப்புக்களை பிரதேச சபைகளிடம் சமர்ப்பிக்க முடியாத நிலை இருந்து வருகிறது. (லோ)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா

# வாராந்த வகுப்பு இடமாற்றம்; ஆசிரியர் சங்கம் கண்டனம்

(நமது நிருபர்)

இலங்கைத் தேசிய கல்வி நிறுவனம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடாத்த திட்டமிடப்பட்டிருந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறியினை நிறுத்தி இந்தப் பகுதி ஆசிரியர்களை வாராந்த வகுப்புக்களுக்காக கொழும்பு அல்லது கண்டி அல்லது காலி மாவட்ட நிலையங்களுக்கு சமூகமளிக்குமாறு கோரியுள்ளமையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கத்தின் செயலாளர் த. மகாசிவம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இந்தப் பயிற்சி நெறியினை வடக்கு கிழக்கில் ஆரம்பிக்க இருந்த நிலையங்களாகிய யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய வற்றில் நடாத்த நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

தேசிய கல்வி நிறுவனமானது ஆரம்பிக்கப்பட்ட கடந்த எட்டு வருடங்களில் சிங்களத்திலும், சில நெறிகளை ஆங்கிலத்திலும் நடாத்தி வந்ததாகவும் தமிழ் மொழியில் ஒரு பயிற்சி நெறியையேனும் நடாத்தவில்லை என்பதையும் கவனத்தில் எடுக்குமாறும், தமிழ் மொழியில் நடாத்தத் திட்டமிடப்பட்ட இந்தப் பயிற்சியைக்கூட அங்குள்ள இனத்துவேசம் பிடித்த சிலர், முஸ்லிம் அதிகாரிகள் வடக்கு கிழக்குக்கு அப்பால் மாற்ற நடவடிக்கை எடுக்கின்றனர் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# ஈராக் - வளைகுடா யுத்தத்தை இரண்டு வருடம் நீடிக்கலாம்

(டோக்கியோ)

ஈராக் வளைகுடா யுத்தத்தை இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கலாம். ஈராக் நிலத்துக்கடியில் சங்கிலித் தொடர் போல் அமைத்திருக்கும் பதுங்கு குழிகள் இரண்டு லட்சத்துக்கு அதிகமான மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கக் கூடியவை என்று ஜப்பானிய நாட்டுக் கட்டடக் கலைஞரை மேற்கோள் காட்டி, டைம்ஸ் என்ற வாராந்த ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

1981க்குப் பின் பாக்தாத்தில் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளில் அரைவாசி வீடுகளில் பாதுகாப்பு வசதிகள் உள்ளன என்று கட்டடக் கலைஞர் தகாசி ஹஸ்மிடா மேலும் தெரிவித்துள்ளார்.


யாழ். பல்கலைக்கழகம், இலங்கை.

## எரிபொருள் விநியோக கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் பின்வரும் அளவு எரிபொருள் கொள்வனவில் விநியோகிப்பதற்குத் தகுதிவாய்ந்த விநியோகத்தர்களிடமிருந்து கூறு விலை கோரப்படுகின்றன.

1. சாதாரண டீசல் வாராந்தம் 300 லீற்றர் அல்லது மொத்தம் 3000 லீற்றர்
2. எஸ். ஏ. ஈ. 40 ரக என்ஜின் ஒயில் வாராந்தம் 5 லீற்றர் அல்லது மொத்தம் 50 லீற்றர்.
3. மண்ணெண்ணெய் வாராந்தம் 200 லீற்றர் அல்லது மொத்தம் 2000 லீற்றர்.
4. பெற்றோல் வாராந்தம் 90 லீற்றர்:

வாராந்தக் கூறு விலைகள் 30. 04. 1991 வரை ஏற்புடையதாக இருத்தல் விரும்பத்தக்கது: ஆனால் கூறுகாரர்கள் விரும்பினால் எந்தக்கால எல்லைவரை இந்தக் கூறு விலைகள் ஏற்புடையன எனக் குறிப்பிடலாம்.

விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தரக் கட்டுப்பாட்டுக்கு அமைவாக இருக்க வேண்டும்.

கூறு விலைகள் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000/- பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் 21. 02. 1991 காலை 10. 00 மணிக்கு முன் பல்கலைக்கழக பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் பல்கலைக்கழக நிதியாளருடன் தொடர்பு கொள்ளவும். யாழ். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும்.

யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். —பதிவாளர்

(B- 2004)


## அமெரிக்கா

6. அரை நூற்றாண்டுக்கு மேலாகக் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அணுவாயுதங்கள் காலவதியாகி விட்டன: எப்படியாயினும் அவற்றை அழித்திட வேண்டும்.

7 தாம் இரசாயன ஆயுதப் பரிகரணம் செய்வதன் மூலம் 3ஆம் உலக நாடுகளையும் மேற்படி ஆயுதங்களை கைவிடும்படி நிர்ப்பந்தித்தது. தமது மரபு ரீதியான ஆயுதங்களுக்கான சந்தையாக 3ஆம் உலக நாடுகளைப் பாவிக்கலாம்.

ஆயுதப் பரிகரண ஒப்பந்தத்துக்கான மேற்படி காரணங்கள் ஒரு பக்கம் இருக்க, ஒப்பந்தத்தின் ஷரத்துக்களிலும் பல 'ஓட்டை'கள் உள்ளன: வல்லரசுகள் இரண்டும் ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமே முன்வந்து வெளிக்காட்டும் (Declared Chemical Weapons) இரசாயன ஆயுதங்களைத்தான் அழிப்பார்கள்.

இந்த ஒப்பந்தமானது இரசாயன ஆயுத உற்பத்தியைத் தடை செய்யாது இரசாயன ஆயுதங்களைத்தான் தடை செய்கிறது. 1992 ஆம் ஆண்டளவில் இரு நாடுகளிடமும் தலா 5, 000 தொன் இரசாயனப் பொருள் கைவசமிருக்கும்'' அப்போதைய நிலைமை மிகுதியுள்ள நச்சு இரசாயனத்தை அழிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இரசாயன ஆயுதப் பரிகரணம் ஒருகண்துடைப்பு நடவடிக்கையாகும். வல்லரசு நாடுகள் திரை மறைவில் இரசாயன ஆயுதங்களை இரகசியமான முறையில் தயாரித்து வருகின்றன.

### மூன்றாம் உலக நாடுகள்

சிரியா, லிபியா, ஈரான், ஈராக், வட கொரியா, எத்தியோப்பியா, வியட்னாம் ஆகிய நாடுகள் உட்பட மொத்தம் 20 மூன்றாம் உலக நாடுகள் இரசாயன ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன; வளை குடாப் போரில் ஈடுபட்டுள்ள நாடுகளில் ஈராக் மாத்திரம்தான் இந்த ரக ஆயுதம் வைத்திருப்பதாக கருதக் கூடாது. இஸ்ரேல் உட்பட எல்லா நாடுகளிடமும் இரசாயனக் குண்டுகளும், கிருமி ஆயுதங்களும் கைவசம் உள்ளன. பூனைக்கு யார் மணிகட்டுவது என்பதுதான் இவர்கள் முன் உள்ள பிரச்சினை.

### ஆயுத உற்பத்தியும் 3ஆம் உலகமும்

முன்னேற்றம் அடைந்துள்ள ஐரோப்பிய நாடுகள் பல ஆயுத உற்பத்தித் துறையிலே வளர்ச்சியெய்தி உள்ளன. இத்துறை சார்ந்த முன்னேற்றம் பொருளாதார வகையில் பின்தங்கிய ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க, ஆசிய நாடுகளில் இல்லை. இந்நாடுகளின் ஆயுத உற்பத்தி ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது தாழ்வான மட்டத்திலேயே உள்ளது. ஆகவே இந்நாடுகள் ஐரோப்பிய நாடுகளுடன் சம பலத்தை ஆயுத உற்பத்தியின் மூலம்தான் பெறமுடியும்.

பொருளாதார வளர்ச்சி தடைமுறை மூன்றாம் உலக நாடுகளில் குறைவாக உள்ளதால், குறைந்த செலவில் அதிக சக்தி வாய்ந்த ஆயுதங்களை உற்பத்தி செய்ய அவசிய அவசரம் ஏற்படுகிறது: இப் பகைப்புலத்தில் 'ஏழையின் அணுகுண்டு' என்று வருணிக்கப்படும் இரசாயன வாயுக் குண்டுகளை மூன்றாம் உலக நாடுகள் தயாரித்து வருகின்றன. இரசாயன ஆயுத உற்பத்தித் துறையில் சோவியத் ரஷ்யா, அமெரிக்கா, யப்பான் ஆகிய நாடுகளின் முன்மாதிரியும் வல்லரசு நாடுகள் விளைத்த நெருக்கடியின் காரணமாகவும் மூன்றாம் உலக நாடுகள் ஆயுத உற்பத்தித் திட்ட இலக்குகளை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது: இந்நாடுகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வல்லரசு நாடுகளும் அறிவியல் நுட்பங்களை வழங்கித் துணைபோனார்கள். தவிரவும், இப்போது அமெரிக்க ஆட்சியாளர் மத்தியில் பெருகி வரும் மனநோயின் தோற்றத்தின் வடிவம்தான், வளைகுடா யுத்தத்தில் இரசாயன யுத்த மிரட்டலாகும். இரசாயன ஆயுதங்களுக்கான தேவையையும் அளிப்பையும் இல்லாமல் செய்வதாகும்.

முதலில் அமெரிக்காவும், அதன் தோழமை நாடுகளும் இரசாயன, கிருமி ஆயுத உற்பத்தியை கைவிட வேண்டும். இதனால் மனித அன்பத்தைக் குறைக்கலாம். ''எமது ஆயுதங்களுக்கு நிகரான ஆயுதங்களை வைத்திராத நாடுகள், தமக்குப் பயன் பொருத்தமான ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்ற நியதியில்லை'' என்று முன்னாள் பென்ரகன் உயர் அதிகாரியும், அமெரிக்க ஜனாதிபதியின் இரசாயன போர்க்கல மீளாய்வுக் குழு உறுப்பினருமான ஜோன் ஜி. டெஸ்ரர் அவர்களின் வாசகம் இரசாயன ஆயுத யுத்தம் வளைகுடாவில் ஏற்படின் அதற்குரிய காரணஸ்தர் வல்லரசு நாடுகள் என்பதைப் பிரதிபலிப்பதைக் காணலாம்.

## ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராம கிருஷ்ண பரம ஹம்சரின் 156 வது ஜெயந்தி விழா வரும் 16 ஆம் திகதி சனி கிழமை திருநெல்வேலி ராம கிருஷ்ணாலயத்தில் மாலை 3.15 க்கு நடைபெறும். இந்த விழாவில் பஜனை சொற்பொழிவுகள் மற்றும் விசேஷ நிகழ்ச்சியாக இசை அரங்கமும் இடம் பெறும்.

## மீண்டும் ஆரம்பம்

கடந்த சில காலமாக தடைப்பட்டிருந்த செயற்கை முறை சினைப்படுத்தும் சேவை மீண்டும் இம்மாதம் எட்டாம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கால்நடைகளுக்கு செயற்கை முறைச் சினைப்படுத்தல் செய்ய விரும்புவோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் வட்டுக்கோட்டை மிருக வைத்திய அலுவலகத்தின் இத்துறைக்கான உத்தியோகத்தர் திரு. ந. விவேகானந்தன் அறிவித்துள்ளார். (20)

## கட்டணக் குறைப்பு

(ஊர்காவற்றுறை)

மண்டைதீவு சந்தி - பண்ணைக் கடல் போக்குவரத்துக் கட்டணம் பயணிகளுக்கு ஆறு ரூபாவும், துவிச்சக்கர வண்டிகளுக்கு ஆறு ரூபாவும் அறவிடப்படுகின்றன. முன்பு இப் போக்குவரத்து கட்டணமாக பயணிகளுக்கு பத்து ரூபாவும், துவிச்சக்கர வண்டிக்கு பத்து ரூபாவும் அறவிடப்பட்டு வந்தது. (15)


## ஆனந்தா கலண்டர்

மலிவு விலையில் பஞ்சாங்கக் கலண்டர்

1991ஆம் ஆண்டுக்கு ஆனந்தா கலண்டர் நாளை புதன்கிழமை வெளிவருகிறது: தமிழ் ஆங்கிலத் திகதிகள், அரச வங்கி வர்த்தக போயா விடுமுறைகள், அமாவாசை, பூரணை, ஏகாதசி, சதுர்த்தி, சஷ்டி, கார்த்திகை விரத தினங்கள் மற்றும் அஷ்டமி நவமி, பிற விசேட தினங்கள் யாவும் அடங்கியது காலத்திற்கேற்ற சிக்கனக் கலண்டர். அழகிய வண்ணப்படங்கள் கொண்ட மட்டைகளுடன் விலை ரூபா 28/-மட்டுமே. கடதாசித் தட்டுப்பாடு காரணமாக சொற்ப பிரதிகளே அச்சிடப்பெறுவதால் விற்பனையாளர்கள் உடனே தொடர்பு கொள்க: விற்பனைக் கழிவுண்டு.

ஆனந்தா புத்தகசாலை

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

(R-1098)

★ சிந்தனைக்கு ★

நம் எண்ணங்கள் அனைத்தையும் விட;
காலம், நமக்கு அதிகம் போதிக்கும்.

— பெஞ்சமின் ஜன்ஸ்டீன்


ஈழநாதம்

3, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 12-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2258
த.பெ.எண் 65


# அறுபதாயிரத்தில் ஒன்று றிச்சர்ட் டி சொய்சா

பத்திரிகையாளர் றிச்சர்ட் டி சொய்சா கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக விசாரிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்க வேண்டும் என எதிர்க் கட்சிகள் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணை பலத்த விவாதத்தின் பின் 'வழமை போல்' தோற் கடிக்கப்பட்டுவிட்டது.

இவ்வாதத்தில் பேசிய எதிர்க்கட்சியினர் பலரும் அரசாங்கத்தில் குற்றமில்லாவிடில், ஏன் ஆணைக்குழு நியமிக்க தயங்க வேண்டும்; தயங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கும் கொலைக்கும் தொடர்புள்ளது என்ற தொனியில் பேசினர்.

அரசாங்கக் கட்சியினரோ றிச்சர்ட் டி செய்சாவின் மரணம் தொடர்பாக பொலிஸ் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பான நீதி வழக்கு நீதிமன்றம் போதுமானது. ஆணைக்குழு அவசியமற்றது என வாதிட்டதோடு பிரேரணைக்கு எதிராக வாக்களித்து பிரேரணையைத் தோற்கடித்தும் விட்டனர்.

றிச்சர்ட் டி சொய்சாவைப் போல் இலங்கையில் ஆயுதம் தாங்கிய சீருடையினரால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப் பட்டவர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் இந்நிலையில் ஒருவருக்கு மட்டும் ஆணைக்குழு அமைக்க அரசாங்கம் மறுக்கிறது 'நியாயமானது' தான் ஏனெனில் இவ்வாறு காணாமற் போன பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் பழைய விடயங்கள் பற்றி அரசாங்கம் விசாரணைகள் நடத்திக் கொண்டிருந்தால், புதிதான அவர்களின் 'செயற்பாடு'களுக்கு நேரம் அற்றதாகப் போய்விடுமல்லவா?

1978ஆம் ஆண்டு பயங்கரவாதத்தடைச் சட்டமும் 1977இல் இருந்து நீடித்துக் கொண்டே வந்த அவசர காலச் சட்டமும் ஆரம்பத்தில் தமிழர் தரப்பில் இருந்தே காணாமற் போனவர்களையும் கொலை செய்யப்படுபவர் களை உருவாக்கி வந்தது அன்று தமிழர் தரப்பினரைத் தவிர வேறு எவரும் அதைக் கண்டு கொள்ளவில்லை. ஆனால், இவர்களின் கண்டுகொள்ளாமை அன்று இவர்களுக்கு ஒரு எச்சரிக்கை விடுக்கத் தமிழர் தரப்புத் தவறவில்லை. ஆனால் இவர்கள் அதனை அசட்டை செய்தனர்.

இனத்தின் பேரால் ஒரு சம்பவத்திலேயே ஐம்பதை நூறு எனத் தமிழர் கொல்லப்பட்டபோதும், ஒரு றிச்சர்ட் டி சொய்சாவிற்கு இன்று பாராளுமன்றத்தில் குரல் எழுப்பப்பட்டது போன்று குரல் எழுப்பப்படவில்லை. அரச பாதுகாப்பில் வெலிக்கடைச் சிறையில் இருந்த போது சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்ட ஐம்பத்திமூன்று தமிழ் இளைஞருக்காகவாவது ஒரு ஆணைக்குழு அமைக்க அரசாங்கம் முன்வரவில்லை. இவற்றை எதிர்க் கட்சியினரும் பெரிய விடயங்களாகக் கருதவில்லை. ஆகையினால் இதைப்பற்றி அவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை.

இவற்றின் பின்பே சிங்களவர் மத்தியில் பல்லாயிரக் கணக்கான கொலைகள், கடத்தல்கள், ஆயுதம் தாங்கிய சீருடையினரால் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் சில விபத்துக்களின் பேரிலும் நடத்தப்பட் டுள்ளன. சிறிலங்கா அரசாங்கத்திற்கும் மொஸாட்டிற்கும் உள்ள தொடர்புகளை அடுத்த பாராளுமன்ற கூட்டத்தில் தெரிவிப்பதாகக் கூறிச்சென்ற கலவானை தொகுதி உறுப்பினர் சரத்முத்தெட்டுவேகம பாராளுமன்றத்திற்கு அடுத்த தடவை வராமலே 'விபத்தில்' சிக்கி மரணமானார். இது பற்றியும் பெரிதாக எவரும் பேசிக் கொள்ளவும் இல்லை.

இந்த நிலையில், மனித உரிமைகள், விசாரணைகள், நீதிமன்றங்கள் என்பன சிறிலங்கா அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பொறுத்து ஓர் பொருட்டாகத் தெரியாமல் போய் விட்டது. மறுவளமாக சிறிலங்கா அரசாங்கத்திடம் தமிழருக்கான நீதியும் சட்டமும் அற்றுப் போய்விட்டது என்பதை தமிழரும் உணர்ந் துள்ளார்கள். இதனை தற்பொழுதுதான் சிங்களவர் உணரத் தொடங்கியிருப்பது ஒரு காலம் தாழ்த்திய புரிந்துணர்வுதான்.

# இரசாயன ஆயுத அழிப்பு ஒப்பந்தத்திலும் அமெரிக்கா சோவியத் வல்லரசுகள் 5000 தொன் வைத்திருக்க ஏற்பாடு

ஈ. ஆர். திருச்செல்வம்

முதலாவது உலகப்போரின் போது நச்சுவாயு ஆயுதங் கள் முதன்முதலாகப் பாவிக் கப்பட்டன என்பது உறுதி யளிக்கப்பட்ட உண்மையா கும். யுத்தத்தின் பின் 1925-ம் ஆண்டு இரசாயன ஆயுதப் பரிகரண ஒப்பந்தம் ஜெனிவா நகரில் கைச்சாத்தாகியது. ஜெனிவா ஒப்பந்தத்தில் மேற் கொண்டும் முன்னேற்றம் காணும் வகையில் 1926 ஜன வரியில் 150 நாடுகளின் பிரதி நிதிகள் பாரிஸில் கூடி ஆலோ சனை கலந்தனர். காலப் போக்கில் 1972-ல் கிருமி ஆயு தப் பரிகரண ஒப்பந்தமும் கைச்சாத்தாகியது. ஜெனிவா ஒப்பந்தத்துக்குக் காரணமா யிருந்த தார்மீகப் பின்ன ணியை வழங்கி, அதில் கைச் சாத்திட்ட நாடுகளே அதைக் காற்றில் பறக்கவிட்டன. ஒப் பந்தத்தின் ஷரத்துக்களை இர கசியமாகவும், பகிரங்கமாக வும் மீறப்பட்டன.

## ஒப்பந்த மீறல்கள்

1935-36-ல் இத்தாலி எத்தி யோப்பியா மீது இரசாயனக் குண்டுகளை வீசியது. சீனா வுடனான போரில் (1937-1945) யப்பான் சீனாமீது பல வகையான இரசாயனக் குண் டுகளைப் போட்டது. எகிப் தும் (1936-1937) யேமன்மீது இரசாயனக் குண்டுகளைப் பொழிந்தது. 1988 மார்ச்சில் ஈராக்கும் ஹலப்ஜா நகர் மீது இரசாயனக் குண்டுகளை ஏவியது.

கிருமி ஆயுதப் பரிகரண ஒப்பந்தத்தின் பங்காளிகளா கிய அமெரிக்காவும், ரஷ்யா வும் டவிலேயே டயர்ரை மெய் வது போல விஞ்ஞான கூடங் களில் கண்ணைக் கட்டிக வில பெரியம்மை நோய்க் கிருமிகளை வளர்க்கின்றன. அமெரிக்காவின் தோழமை நாடுகளான இஸ்ரேலும், தெ. ஆபிரிக்காவும்கூட பெரியம்மை நோய்க் கிருமிகளை வளர்த்து வருவதாக உறுதியளிக்கப் படாத செய்திகள் தெரிவிக் கின்றன. 1980 உடன் பெரிய ம்மை நோய் உலகில் ஒழிக் கப்பட்டுவிட்டது. பாரசீக வளைகுடாப் போரில் அமெ ரிக்கா பெரியம்மை நோய்க் கிருமிகளை உபயோகிக்கக் கூடும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் முன்கூட்டியே எச் சரித்துள்ளது.

ஈராக் பாரசீக வளைகுடாப் போரில் இரசாயன மற்றும் கிருமி ஆயுதங்களைப் பாவிக் கப் போவதாக விசனிக்கும் நாடுகள் பாம்புக்குத்தலையும் மீனுக்கு வாலும் காட்டுகின் றன. லிபியா ஹப்ரா பாலை வனத்தில் அமைந்திருக்கும் இரசாயன உற்பத்தி ஆலைக்கு யப்பான் ஸ்ரீல் வேர்க்ஸ் நிறுவனமும் மேற்கு நாடுகளும் உதவியுள்ளன. இவ்வகையில் ஈராக்கிற்கு மேற்கு ஜெர்மனி விண்வெளி ஆய்வு நிறுவனமான மெசச் செமிஸ் - பொல்கோ - பெல் கம் நிறுவனம் உதவியுள்ளது. சிரியா 1970 களில் சோவியத் ரஷ்யா, செக்கோஸ்லேவியா ஆகிய நாடுகளிலிருந்து இரசா யன ஆயுத உற்பத்தி தொடர்பான தொழில் நுட்பங்களைத் தெரிந்து கொண்டது. கியூபாவும் நச்சு ஆயுதங்களை unita கெரில் லாக்களுக்கு எதிராக உபயோ கித்தது. சோவியத் ரஷ்யா இரசாயன நச்சுவாயு ஆயுதங் களை உபயோகித்து ஆப் கானிஸ்தான் கிராமம் ஒன் றையே அழித்ததாக ஆப் கான் கொரில்லாத் தலைவர் ஜெனரல் ரஹீம் தெரிவித்துள் ளார். ரஷ்ய சிப்பாய்கள் கடுகு வாயுக் கலன்களுடன் (Mustard Gas) ஆப்கானிஸ் தானில் கைதாகியுள்ளார் கள்.

இச்சம்பவங்கள் நிகழ்ந்த சமயங்களில் ஐரோப்பிய சமூ கத்தின் மரபுடைத் தன்மை யும், மனிதநேயமும் என்ன வாயிற்று? உலக நாடுகள் தோள்களை அசைத்துக் கொண்டன. இந்த நாடு களுக்கு எதிரான அரசியல் முட் டுக்கட்டையோ, பொருளா தாரத் தடையோ ஏற்பட வில்லை. உலகம் கண்மூடி மௌனியாகியது.

## புதிய ஒப்பந்தம் - உடனடிக் காரணம்

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவும், அமெரிக்க ஜனாதிபதி புஷ்சும் 1990இல் மே 31 முதல் ஜூன் 3 வரை ஆலோசனை கலந்து ஆயுதப் பரிகரண ஒப் பந்தமொன்றில் கைச்சாத்திட் டார்கள். குறிப்பிட்ட வகை ஆயுதங்களை முற்றாக அழித்து விடுவது என்ற முறை யில் இந்த ஒப்பந்தம் முக்கிய ஏற்பாடாகும்.

இரண்டாவது உலகப் போர் காலத்திலும், 1950-60 களுக் கிடையில் இரு வல்லரசுகளும் பெருமளவில் இரசாயன ஆயு தங்களைக் களஞ்சியப்படுத் தின. ரஷ்யாவிடமும், அமெ ரிக்காவிடமும் 40,000 முதல் 50,000 தொன் இரசாயனம் கைவசமிருந்தன. இத்தகைய பாரிய அளவிலான இரசா யன உற்பத்தியால் இரசாயன விபத்துக்களும் அதிகரித்தன.

1960இல் அமெரிக்கா அதன் இரசாயனக் குண்டு ஒன்றைப் பரிசோதனை முயற்சியாக வெடிக்கவைத்தது. நச்சுவாயு களால் பண்ணை ஒன்றில் 6,000 ஆடுகள் செத்து மடிந் தன. அமெரிக்காவில் புத்தி ஜீவிகளும், பொதுமக்களும் கண்டனக் குரல் எழுப்பினர். இதன் விளைவாக அப்போ தைய அமெரிக்க ஜனாதிபதி றொபேட் நிக்ஸன் மூன்று அம்ச அறிக்கை ஒன்றில் அமெ ரிக்கா இரசாயன ஆயுத உற் பத்தியைக் கைவிடப்போவ தாகப் பிரகடனப்படுத்தினார். சமகாலத்தில் சோவியத் ரஷ் யாவிலும் பல இரசாயன விபத்துக்கள் நிகழ்ந்தன ஆனால் அவை மூடி மறைக் கப்பட்டன.

இரு வல்லரசுகளும் தமது இசைவாக தமக்கிடையில் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைய 31 டிசம்பர் 2002 ஆண்டில் இரசாயன ஆயுதங் களை அழித்தாக வேண்டும். இடைப்பட்ட காலப் பகுதி யான டிசெம்பர் 31, 1999இல் இரு தரப்பினரும் தலா 50 வீகித இரசாயன ஆயுதங் களை அழிக்கவேண்டும். இவ் ஒப்பந்தத்தின் அசாதியான குணவிசேஷம் எதுவென்றால் 2002க்குப் பிறகும் இரு நாடு களும் தலா 5,000 தொன் எடை நச்சு இரசாயனத்தை வைத்திருக்கலாம். 5,000 தொன் கையிருப்பானது அவ சரம் ஏற்படும் பட்சத்தில் இரசாயன ஆயுதங்களை தயா ரிப்பதற்கு தாமே ஏற்படுத் திக் கொண்ட ஒரு முன் நிபந் தனையாகும்.

## மறைமுகக் காரணிகள்

அமெரிக்காவும், ரஷ்யாவும் எதேச்சையாக தமக்கிடையே இணக்கம் கண்டு ஆயுத பரி கரண ஒப்பந்தத்தில கைச் சாத்திட்டன. அதற்கான மறைமுகக் காரணங்கள் வருமாறு;

> இரசாயன ஆயுதங்களுக்கான தேவையையும், அளிப்பையும் இல்லாமல் செய்வதானால் முதலில் அமெரிக்காவும், அதன் தோழமை நாடுகளும் இரசாயன, கிருமி ஆயுத உற்பத்தியைக் கைவிட வேண்டும். எமது ஆயுதங்களுக்கு (அமெரிக்கா) நிகரான ஆயுதங்களை வைத்திராத நாடுகள், தமக்குப் பயன் பொருந்தமான ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்ற நியதியில்லை என்று முன்னாள் பென்டகன் உயர் அதிகாரி யோன் ஜி கெஸ்ரர் அவர்களின் கூற்று இரசாயன ஆயுதப் போர் பற்றிய சூழ்நிலையை விளக்குகிறது.

1. மரபுவழி ஆயுதங்கள் அல்லது அணுவாயுதத்துக்கு இரசாயன ஆயுதத்தைச் சம மெனக் கருத முடியாது என் பதை இரு வல்லரசுகளும் நன்கறிந்திருந்தனர்.

2. ஆயுதப் பரிகரண ஒப் பந்தங்களின் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்த்தால் ஆயுதப் பரிகரணம் என்ற போர்வையில் பயனற்ற ஆயுதங்கள் கைவிடப்பட்டி ருப்பதை அவதானிக்கலாம்.

3. சமபலமுள்ள நாடுகள் இரசாயன யுத்தத்தில் ஈடு படுமாயின் அது அந்நாடுக ளுக்கே அழிவாக அமையும். சிறிய நாடுகள் வல்லரசுகளு டன் இரசாயன ஆயுதங்க ளைக் கொண்டு மோதினால் சிறிய நாடுகளே அனுகூல மான விளைவுகளைப்பெறும்.

4. தரைத்தோற்றம், கால நிலை, ஆகியனவும் இரசா யன யுத்தத்தைப் பாதிக்கும். ஆகவே இருவல்லரசுகளும் இரசாயன ஆயுதங்களைப் பயன் பொருத்தமற்றவையா கக் கருதின.

5. ரஷ்யாவும், அமெரிக்கா வும் இரசாயன ஆயுத உற்பத் தியில் ஏகபோக உரிமை வைத்திருக்க முடியாத நிலை தோன்றியது. மூன்றாம் உலக நாடுகளும் இரசாயன ஆயுதங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்தன.

(2ஆம் பக்கம் பார்க்க)

# அமைதிக்கு வாய்ப்பே கிடையாது; ஈராக் இவ்வாறு கூறவில்லை

-அலி அக்பர் வலயாசி

(தெஹிரான்)

"வளைகுடாப் போருக்கு அமைதித் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான வாய்ப்பே இடையாது என ஈராக் கூறவில்லை" என்று ஈரானின் வெளியுறவுத் துறை அமைச்சர் அலி அக்பர் வலயாசி தெரிவித்தார்.

சி. என். என். தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த ஈரானிய வெளியுறவுத் துறை அமைச்சர் அமெரிக்காவும், அதன் கூட்டுப்படைகளும் இந்தப் போரை விரிவுபடுத்தி வந்ததனாலேயே ஈராக்கும் போரை நீடித்து நடத்த உறுதி கொண்டுள்ளது என முடிவு செய்ததாகவும் தெரிவித்தார்.

இதேநேரம் வளைகுடாவில் அமைதித் தீர்வு ஒன்றை காண்பதற்கு இன்னும் அதிகமான அவகாசம் தேவைப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். ஈரானிய ஜனாதிபதி ரப்சன்ஜனி பாக்தாதிற்கு இன்னொரு செய்தியை அனுப்பி வைக்கப்போவதாகவும் கூறினார்.

ஆனால் குவைத்தில் இருந்து தமது இராணுவத்தை விலக்கிக் கொள்வதான யோசனையை பரிசீலனை செய்வதற்கு ஜனாதிபதி சதாம் ஹுசைன் மறுத்துவிட்டாரா என்பது பற்றி கூறுவதற்கு அவர் மறுத்துவிட்டார்.

இதேவேளை ஈரான் தெரிவித்திருந்த யோசனைகளுக்கு ஈராக்கிடம் இருந்து கிடைத்துள்ள பதில் ஏமாற்றமளிப்பதாக உள்ளது என்றும், ஆனால் அது முற்றிலுமே எதிர்மாறானதாக அமைந்திடவில்லை என ஈரானிய ஜனாதிபதி ரப்சன்ஜானி தெரிவித்துள்ளார் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்துடன் ஈராக் குவைத்தில் இருந்து ஓரளவிற்குத் தன்னும் விலகிச் சென்றால் கூட அது போர் நிறுத்தம் ஒன்றிற்கு வழி வகுத்து விடலாம் என்பதில் தமக்கு நம்பிக்கை இருந்து வருவதாக ரப்சன்ஜனி தெரிவித்திருப்பதாக செய்திகள் குறிப்பிடுகின்றன.

# ஈராக் மக்களுக்கே வெற்றி

- சதாம்

(பாக்தாத்)

"வளைகுடாப் போரில் ஈராக்கிய மக்களுக்கே வெற்றி நிச்சயம் என்று, அந்த வெற்றி பொறுமையுடன் வந்து சேரும்" என்று ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் அறிவித்துள்ளார்.

நேற்று வானொலி மூலம் மக்களுக்கு ஆற்றிய 30 நிமிட உரையில் வளைகுடாப் போரில் தொடர்ந்து உறுதியாக போர் நடத்துவது என்றும் தமது நாட்டிற்கு ஆதரவாக இருந்து வந்துள்ள நாடுகளையும் புகழ்ந்து தமது நன்றியை தெரிவித்தார்.

ஆண்டவன் அளித்துள்ள பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான அதிகாரத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கைவிட்டுவிட்டதை அத்தோடு அதன் மீதான நம்பகத்தன்மையும் இழந்து போய்விட்டது என்று குறிப்பிட்டார்.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வளைகுடாப் போர் திட்டமிட்டபடி நடக்கிறது என்றும் உரிய நேரத்தில் உரிய இடத்தில் உரிய முறைப்படி தரைப்படை போரை ஆரம்பிக்கும் அப்போது வெற்றிய ருசிக்க என்பதை தலைநகர்கள் அறிந்து கொள்வார்கள்" எனக் குறிப்பிட்டார்.

## பாக்தாத் மீது கொத்தணிக் குண்டுகள்

அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைகளின் விமானங்கள் பாக்தாத்தில் "கொத்தணிக் குண்டுகள்" என்ற புதிய வகைக் குண்டுகளை வீசிவருகின்றன.

கொத்தணிக்குண்டு என்பது ஒரு கொள்கலனில் கைக் குண்டுகள் அளவிலான நூற்றுக் கணக்கான குண்டுகள் நிரப்பப்பட்டு அந்த கொள்கலன்கள் பாக்தாத் நகருக்குள்ளும் இதர ஈராக்கிய நகருக்குள்ளும் வீசப்படுவதால் கொள்கலன் வெடித்ததும் அதற்குள் இருந்து வெளியே பாயும் இச்சிறுகுண்டுகள் ஏறத்தாழ ஒரு மைல் பரப்பளவான பிரதேசத்தில் உள்ள மக்களை காவு கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

### கடவுள் எப்பொழுதும்

...யும் அதிகரித்துள்ளதாம். அவர்கள் பாவமன்னிப்பும் கேட்கிறார்கள் செபமாலையையும், பைபிளையும் தருமாறு தம்மிடம் கேட்பதாக மதகுருக்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனவரி 17இல் வளைகுடா யுத்தம் ஆரம்பித்தபிறகு அமெரிக்க மதுமிப் படைகளின் போக்கு மாறியுள்ளது என்று அவர்களுடன் தங்கியிருக்கும் கத்தோலிக்க மதகுருவான வண. தெமமாத்தி கெகிஸ்ரன் தெரிவித்துள்ளார்.

கடவுள் எமக்கு எப்பொழுதும் தேவை இப்போதும் அவர் எமக்குத் தேவையென்கிறார் சவுதியில் அமெரிக்க விமானத்தளமொன்றில் மதகுருவாயிருக்கும் டரட்டஸ்ரான்ட் மதகுருவான வண. மைக்கேல்.

### வடக்குகிழக்கு

பீட்டுத் திட்டத்தின்படி வடகிழக்கில் மட்டும் சுமார் 16,66,170 மக்கள் அகதிகளாக தமது வாழ்க்கையைத் தொடர்ந்த வண்ணமுள்ளனர் எனினும் இத்தொகை அகதி முகாம்களுக்கு வெளியில் உள்ளவர்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளின் மேலும் அதிகமாக இருக்கும் எனத் தெரிகின்றது.

நாட்டின் மொத்த அகதிகள் தொகையில் வடகிழக்கு மக்கள் சுமார் 95 வீதத்திலும் அதிகமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

### குண்டுவீச்சு

லில் பெ. சிப்சன் (வயது 21) க. தவராசா (வயது 30) என்பவர்கள் உட்பட மேலும் இருவர் இரப்பைக்குளப்பகுதியை நோக்கிவந்த இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் சுப்பிரமணியம் சோதி (வயது 33) என்பவர் காயமடைந்தார். (க) (85)

### அம்பாறையில்

ஞரைக் கைதுசெய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை விபரம் எதுவும் தெரியவில்லை.

இதேவேளை கடந்த நாலாம் திகதி தாண்டியடி முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினர் சிவா என்பவரைக் கைது செய்து அவரைச் சுட்டுக் கொன்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சிங்கள

சிறிமாபுர என்னுமிடத்தில் குடியேற்றப்பட்ட சிங்கள வாசிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இப்பொருள்கள் யாவும் சர்வோதயத்தின் தலைவர் ஏ. ரி. ஆரியரத்தினாவின் மனைவியினால் திசைதிருப்பப்பட்டு திருமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் சிறிமாபுரவிற்கு நேரில் சென்று வழங்கப்பட்டது இச்செயலுக்கு அண்மையில் திருமலை மாவட்ட சர்வோதய பதில் இணைப்பாளராக புதிதாக நியமிக்கப்பட்ட தமிழர் ஒருவரும் உடந்தையாக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தாண்டிக்குளம்

தமது தாக்குதல்களை ஆரம்பித்த முதல்நாளான நேற்று முன்தினம் அதிகாலை நான்கு மணியளவிலேயே வவுனியா நகருக்குள் இருந்து கவசவாகனங்கள், டிரக் வண்டிகள், ஜீப்புகள் சகிதம் கால்நடையாக யாழ் வீதியால் முன்னேற முற்பட்டனர் அச்சமயம் விடுதலைப்புலிகள் பலத்த எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர் காலை நான்குமணிக்கு ஆரம்பித்த இந்த நீண்ட யுத்தம் இடைவிடாது இரவு ஏழுமணிவரை நடைபெற்றது.

முன்னேறிய இராணுவத்தினரில் ஐவர் விடுதலைப்புலிகளின் மிதிவெடிகளில் சிக்கியதால் கால்களை இழந்தனர் மேலும் பெருந்தொகையான இராணுவத்தினர் இந்த நீண்ட யுத்தத்தில் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் நம்பப்படுகிறது ஆனால் குறிப்பான செய்திகள் எவையும் தெரியவரவில்லை.

அத்துடன் வவுனியாப் பகுதியில் ஏற்பட்ட மோதலில் இரு அதிகாரிகள் கொல்லப்பட்டதாகவும் இரு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தாண்டிக்குளத்தில் வைத்து தாக்கப்பட்ட இராணுவத்தினர் முன்னேற முடியாத நிலையில் இரவு தமது முகாம்களுக்குள் சென்று முடங்கிக் கொண்டனர்.

இதே வேளை பரநட்டகல் என்னும் இடத்தில் வைத்து மாமடு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது இத்தாக்குதல் காலை எட்டு மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரையும் நடைபெற்றது. இங்கும் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர்.

வவுனியாவில் உள்ள விமானதளத்தை பயன்படுத்தி சிறிலங்கா ஆகாயப் படை விமானங்கள் தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களை நடத்தின.

மாறிமாறி விமானத்தளத்தில் இறங்கி குண்டுகளை நிரப்பிக்கொண்டு காலை எட்டு மணியிலிருந்து நொச்சிமோட்டை, தாண்டிக்குளம் புதுக்குளம், சாஸ்திரிகூழாங்குளம், ஓமந்தை ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக குண்டு வீச்சு இடம் பெற்றது.

நேற்று முன்தினம் காலை எட்டு மணியளவில் ஜி. சி. ஈ. எம். எஸ் பாடசாலையும் நரசிம்மன்கோவிலும் முற்றாக அழிக்கப்பட்டு வீடுகளும் பல இக் குண்டுவீச்சுக்குள்ளாயின. நெளுக்குளத்திலும் வீடுகள் சேதமுற்றன. கால்நடைகளும் இறந்தன.

# போராளிகள் ஊடுருவல் 10 நாட்களுக்குள் நிறுத்தப்படும்

— சுபோத்காந் சகாய்

(சென்னை)

தமிழ் நாட்டுக்குள் இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் ஊடுருவல் அடுத்து வரும் பத்து நாட்களுக்குள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுவிடும் என்று மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத்காந் சகாய் கூறியிருக்கிறார்.

திருச்சி விமானநிலையத்தில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய அவர் கடந்த பத்து நாட்களில் இலங்கைத் தமிழ்ப் போராளிகள் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் திமுக அரசு சாதிக்க முடியாததைக் கடந்த பத்து நாட்களில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் சாதிக்க முடிந்தது என்றார். தமிழக ஆளுனரை மாற்றும் யோசனை இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் திட்டம் இப்போதைக்கு இல்லை என்றும் குறிப்பிட்டார். இலங்கைத் தமிழ்ப் போராளிகளிடம் இருந்து கைப்பற்றப்படும் ஆயுதங்களை மாநில அரசு பயன்படுத்தலாம் என்றும் அவர் கூறினார்.

# 26 ஆம் நாள் போர்

## மொஸ்கோ சமாதான முயற்சி

★ வளைகுடாப் போர் குறித்து சமாதானப் பேச்சுக்கள் நடத்த சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் தமது சிறப்புத் தூதுவரான பிரிமகோவை பக்தாத்திற்கு அனுப்பியுள்ளார்.

★ நடைபெறப்போகும் தரை யுத்தத்தில் அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படைகளை நரகத்திற்கு அனுப்பப்போவதாக ஈராக் அறிவித்துள்ளது.

## பாகிஸ்தான் ஆயுத ஏற்றுமதி

★ பாகிஸ்தான் ஒருகோடி டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருப்பதாக கூறப்படுகிறது ராக்கெட் லோஞ்சர்கள், ஏவுகணைகள், துணை இயந்திர துப்பாக்கிகள், எறிகுண்டுகள் ஆகியவை சவூதிஅரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஜோர்டான் நாடுகளுக்கு விநியோகம் செய்யப்பட்டதாக இஸ்லாமாபாத்தில் வெளியாகும் பத்திரிகை ஒன்று குறிப்பிடுகிறது.

### ஈராக்

கோ தெரிவித்தார். வளைகுடா யுத்தம் சோவியத்-அமெரிக்க உறவுகளில் விரிசலை ஏற்படுத்தக் கூடாதென்றும் அவர் தெரிவித்தார்.

மாஸ்கோவில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அலெக்சாண்டர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர் ஓய்வுக்கான ராஜரீக முயற்சிகள் தீவிரமடைந்திருக்கும் இவ் வேளையில் சீனாவின் பிரதிப்பிரதமர் வெமிகு சமாதான முயற்சியை மேற்கொண்டு துருக்கி ஈரான் சிரியா ஆகிய நாடுகளுக்குச் செல்லவுள்ளார்.

இதேவேளை வளைகுடாப் போருக்குத் தீர்வுகாண்பதற்கான அணிசேரா நாடுகளின் மாநாடு இன்று பெல்கிரேட் நகரில் கூடுகிறது. 15 அணிசேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மேற்படி மாநாட்டு ஆலோசனைகளில் கலந்து கொள்கிறார்கள்.

### மன்னார்

பேசில் தீவுப் பகுதியிலேயே இறக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு இறக்கப்படும் பொருட்களை ஏற்றுவதிலும், போக்குவரத்துத் தடைகளினாலும் பெருமளவு பொருட்கள் பழுதடைந்துள்ளன.

ஏற்கனவே 1990 ஒக்டோபரில் தலைமன்னார் துறைமுகத்தில் இராணுவ நிர்ப்பந்தத்தினால் இறக்கப்பட்டு கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த உணவுப்பொருட்கள் எடுக்க முடியாமல் பழுதடைந்த நிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அரசியல்

பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பொதுமக்களின் குறிப்பாக குழந்தைகளின் உயிரிழப்புகள் குறித்து ஆழ்ந்த வேதனையை வெளியிட்டார். ஈராக்கிற்கு பால் விநியோகத்தை தடை செய்தமைக்காக அவர் வாஷிங்டனை குறை கூறினார்.

இதேவேளை உலகச் சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதிக் குழு ஒன்று இவ்வாரம் ஈராக் செல்லவுள்ளது. குழந்தைகளுக்கு மருத்துவப் பொருட்களை எடுத்துச் செல்லும் இப் பணியில் யுனிசெப் நிறுவனமும் இணைந்து கொள்ளவுள்ளது. நாம் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை மனிதாபிமான அடிப்படையிலானது. மக்களின் மருத்துவ வசதிக்கானது என யுனிசெப் கூறியுள்ளது.

இதனிடையில் வளைகுடாப் பிராந்தியத்தில் தற்போது நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளின் அவசியம் என்ன என்பதை மதிப்பிட முடியவில்லையெனப் பெரஸ் டி குவெயர் கூறியுள்ளார். இந்தப் போரைப்பற்றி நாம் அறிவதெல்லாம் அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்சும் கூறுவதேயன்றி வேறில்லை எனவும் ஐ. நா. பொதுச்செயலாளர் பெரஸ் டி குவெயர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.